# நம்பிள்ளை வைபவம்

ஸ்ரீ உ வே ஶதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ஸ்ரீரங்கராஜனை பெரியபெருமாள் தொடங்கி நம் ஸ்வாமி எம்பெருமானார் நடுவாக மணவாளமாமுநிகள் ஈறாக 18 அல்லது 19 பூர்வாசார்யர்களைக் கொண்ட ஒருவரிசை *ஓராண்வழிக்ரமம்* என்று கொண்டாடப்படுகிறது. அந்த வரிசையில் பதினான்காவது பூர்வாசார்யர் *நம்பிள்ளை* என்று ப்ரஸித்தி பெற்ற மஹான் ஆவர். நம்மாழ்வார் அருளிச்செய்ததும், ஸாமவேத-ஸாரமானதுமான திருவாய்மொழியின் அர்த்தங்களை மிகப்பெருக்கி உபந்யஸித்தது இவருடைய தனிப்பெருமையாகும்.

திருவாய்மொழிக்கு *ஆறாயிரப்படி*, *ஒன்பதினாயிரப்படி*, *பன்னீராயிரப்படி*, *இருபத்துநாலாயிரப்படி*, *முப்பத்தாறாயிரப்படி* என ஐந்து வ்யாக்யாநங்கள் அமைந்துள்ளன. அவற்றில் மிகப் பெரிய வ்யாக்யாநமான முப்பத்தாறாயிரப்படி என்பது, நம்பிள்ளை பகவத்விஷய க்ரந்த காலக்ஷேபத்தில் ஸாதித்த விஷயங்களைக் கேட்டு வடக்குத் திருவீதிப் பிள்ளை அப்படியே எழுதி வைத்ததொன்றாகும். இந்த வ்யாக்யாநம் எம்பெருமான் பெருமைக்கும், ஆழ்வார் பெருமைக்கும், மிகத் தகுதியுள்ளதாய் அமைந்தபடியால் இதற்கு *ஈடு* என்னும் ப்ரஸித்தி ஏற்பட்டது. இதை *ஈடுமுப்பத்தாறாயிரம்* என்றே வழங்குவர் பெரியோர். இவருடைய வைபவத்தை நாம் அநுபவிக்குங்கால் அதை இவருடைய ஶிஷ்யத்வ-பூர்த்தி என்றும், ஆசார்யத்வ-பூர்த்தி என்றும் இரண்டாக வகுத்துக் கொள்ள வேண்டும்.

முதலில் இவருடைய ஶிஷ்யத்வ-பூர்த்தியை அநுபவிப்போம். இவர் சோழ நாட்டிலுள்ள *நம்பூர்* என்னும் க்ராமத்தில் வடம குலத்தில் திருவவதரித்தவர். திருவரங்கத்துத் திருக்காவேரிக்குத் தென்கரையில் ஓரிடத்தில் வஸித்து வந்தார். இவருடைய திருநாமம் வரதர் என்பது. *பெரிய திருமுடி அடைவு* என்கிற க்ரந்தத்தில் நம் பூர்வாசார்யர்களில் அநேகரை வடமகுலத்தவர்களாகக் காட்டியிருப்பதால் வடமகுலத்தைப் பற்றிச் சிறிது அறிவித்துவிட்டு மேலே செல்கிறேன்.

நெடுநாட்களாக, *வடமம் முற்றி வைணவம்* என்று ஒரு பழமொழி வழங்கி வருகிறது. அதற்குச் சிலர், **இப்போது *ஸ்மார்த்தர்கள்* என்று சொல்லப்படுபவர்கள்தான் வடமர்கள்; ஸ்ரீவைஷ்ணவ பூர்வாசார்யர்களும் முன்பு ஸ்மார்த்தர்களாக இருந்தவர்களே** என்று பொருள் உரைப்பர்கள். அது சரியன்று; வேதங்களையும், அவைகளின் உபப்ரும்ஹணங்களான இதிஹாஸ புராணாதிகளையும் ப்ரமாணமாகக் கொண்டவர்கள் *வடமர்கள்* எனப்படுவர். இவர்கள் அத்வைதிகள், விஶிஷ்டாத்வைதிகள் என்று

இருவகைப்பட்டவர்களாய் இருந்தனர். இரு சாராரும் ஒரு காலத்தில் வைஷ்ணவர்களாக இருந்தவர்களே! அத்வைதிகள் ஸகுணப்ரஹ்மமாகக் கொண்டிருப்பது விஷ்ணு வையே! ப்ரஹ்மா, ஶிவன் முதலான தேவதாந்தரங்களை விஷ்ணுவுக்கு அடிமைப்பட்டவர் களாகவும் உபாஸிக்கத் தகாதவர்களாகவுமே அவர்களும் கொண்டிருந்தார்கள்.

அத்வைத மத ஸ்தாபகரான ஆதிஶங்கரர் வைஷ்ணவரே! அதனால்தான் அவர் *பஜ கோவிந்தம்* முதலான அநேக விஷ்ணு ஸ்தோத்ரங்களைச் செய்திருக்கிறார். இதர தேவதா பரமான ஒரு ஶ்லோகமும் அவரால் பண்ணப்படவில்லை. *நாராயண ஸ்ம்ருதி* என்று தான் அவர் கையெழுத்து இட்டு வந்தார். இன்றைக்கும் அவர் பரம்பரையில் வந்தவர் களான மூன்று மடாதிபதிகளான ஶங்கராசார்யர்களும் *நாராயணஸ்ம்ருதி* என்றே கையெழுத்திடுகிறார்கள். சில நூறு வருடங்களுக்கு முன்பு ஶங்கரர் ஒருவர் தேவீ உபா ஸனைக்காக பஸ்மத்தை தரிக்க ஆரம்பித்தார். அவர் வழியில் வந்தவர்கள் திர்யக் புண்ட்ரத் தையும் பஸ்மதாரணத்தையும் கைக்கொண்டு ஶைவர்களாகவே ஆகிவிட்டார்கள். இன் றைக்கும் பலவிடங்களிலும் அத்வைதிகளில் சிலர் சந்தனத்தால் ஊர்த்வபுண்ட்ரங்களை தரித்து பஸ்ம ஸம்பந்தமின்றியும், தேவதாந்தர ஸம்பந்தமின்றியும் இருக்கிறார்கள்.

ஆக அத்வைதிகளும், விஶிஷ்டாத்வைதிகளும் வைஷ்ணவர்களாக இருந்தவர்களே! இந்த இரு வகுப்பாருக்கும் *வடமர்கள்* என்றுதான் ப்ரஸித்தி இருந்தது. அவர்களுள் கொண்டு கொடுக்கும் ஸம்பந்தமும் இருந்து வந்தது. ஆழ்வார்கள் காலத்திலும், ஸ்ரீமந்நாதமுநிகள் காலம் முதற்கொண்டும் பலர் வர்ண தர்மத்துக்கு மட்டும் முக்யத்வம் கொடாமல், அத்து டன் ப்ரபந்ந தர்மத்துக்கும் முக்யத்வம் கொடுத்து, அதனடியாக, *ஸ்ரீவைஷ்ணவர்கள்* என்று பிருதம் பெற்றார்கள். அதைக்கண்டு பல அத்வைதிகள் தாமே திருந்தியும் வாதத் தில் தோற்றும் ஸ்ரீவைஷ்ணவர்களானார்கள்.

ஶங்கர மடாதிபதிகள் ஶைவர்களானபோது அத்வைதிகளில் பலர் தாங்களும் திர்யக் புண்ட்ரதாரிகளாய், பஸ்மதாரிகளாய், தேவதாந்தர பஜநமும் செய்யப் புகுந்தபடியாலே, அவர்களுடன் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸம்பந்தம் கூடாதென்று அவர்களை ஸ்மார்த்தர்கள் என ஒதுக்கிவிட்டனர் நம்பூர்வர்கள். அத்தால் அவர்களுடன் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு எவ் வித ஸம்பந்தமும் இல்லையாகி விட்டது. ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்ட கேவல வர்ண தர்மங்களில் மட்டும் ஊற்றம் உடையவர்களானபடியாலே அவர்கள் ஸ்மார்த்தர்கள் என்று அழைக்கப்பட்டனர். காலக்ரமத்தில் அத்வைதிகள் ஸ்மார்த்தர்கள் என்றும், விஶிஷ்டாத் வைதிகள் ஸ்ரீவைஷ்ணவர்கள் என்றும் ஓர் உறுதி உண்டாகி விட்டது.

ஆக, முன்பு வடமர்கள் எனப்பட்டவர்கள் இப்போதைய ஸ்மார்த்தர்கள் போன்றவர களன்று; அவர்கள் வைதிகர்களேயாவார்கள். அவர்கள் திவ்யப்ரபந்த ஸம்பந்தம் பெற்ற காலத்தில் ஸ்ரீவைஷ்ணவர்களாக ஆனார்கள். பெரியதிருமுடியடைவு நம்பூர்வாசார்யர் களை வடமர்கள் என்று காட்டியதில் குறையொன்றும் இல்லை.

வரதர் என்கிற இவரும் விஶிஷ்டாத்வைத வடமகுலத்தில் அவதரித்துத் திருமண்காப்பும் தரித்தவரேயாவர். சிலர் இவர் அவதரித்த நம்பூரை மலையாளத்தில் இருப்பதாகக் கொண்டு இவர் நம்பூதிரி குலத்தவர் என்றும், சிலர் நம்பிள்ளை என்கிற திருநாமத்திலுள்ள பிள்ளை என்பதைக் கொண்டு இவர் பிள்ளைமார்குடி, கணக்குபிள்ளைக்குடி என்றும் சொல்வது சரியன்று. நம்பூர் சோழமண்டலத்திலுள்ள ஒரு சிற்றூர். பிள்ளை என்பது கௌரவச்சொல். நம் பூர்வாசார்யர்கள் பலருக்கு பிள்ளை என்கிற அடைமொழி உண்டு. திருவரங்கத்தில் ஓராண்-வழி-க்ரம ஆசார்யர்களில் பதின்மூன்றாமவரான நஞ்ஜீயர் என்கிற மஹான் ஸ்ரீவைஷ்ணவ ஸிம்ஹாஸநாதிபதியாக விளங்கி வந்தார். அவர் பெரியபெருமாள் ஸந் நிதியில் திருவாய்மொழி காலக்ஷேபம் ஸாதித்து வந்தார். ஸ்ரீவைஷ்ணவர்கள் பெரும் திரளாகக் கேட்டு வந்தார்கள். அக்கோஷ்டியில் நம்பூர் வரதரும் ஓர் ஓரத்திலிருந்து கேட்டு வந்தார். நஞ்ஜீயர் திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரம் க்ரந்த அளவில் ஒரு வ்யாக் யானமிட்டு, அதை நன்கு எழுதுவிக்க வேணும் என்று நினைத்து, கோஷ்டியில் அதற்கு ஆள் தேட, அங்குள்ளவர்கள் நன்றாக எழுதவல்ல நம்பூர் வரதரைக் காட்டிக் கொடுத் தார்கள்.

நம்பூர் வரதரும் எழுதிக் கொடுக்க இசைந்து தமக்கொரு ஆசார்ய ஸம்பந்தம் இல்லா மையைக் கண்டு கவலையுற்று, நஞ்ஜீயரையே தம்மை ஶிஷ்யனாக ஏற்றுக்கொள்ளும்படி ப்ரார்த்தித்தார். அவரும் உகந்து இவரை ஶிஷ்யராக்கிக் கொண்டு, இவரை ப்ரபத்தி நிஷ்டராம்படி காலக்ஷேபம் ஸாதித்து, தாமெழுதிய ஏட்டுச் சுவடியையும் கொடுத்தார். இவர் அதைத் தம் க்ருஹத்தில் வைத்து எழுதுவதாகச் சொல்லி, அத்துடன் திருக்காவேரியை தாண்டும்போது அது ப்ரவாஹத்தில் நழுவிப்போய் விட்டது. மிகவும் துக்கமடைந்த வரத ரும் தமது இல்லம் அடைந்து ஆசார்யன் திருவடிகளையே நினைத்து எழுதப்புக, ஆங் காங்கு சில விசேஷார்த்தங்களுடன் 8-10 நாட்களில் இரவும் பகலுமாக எழுதி முடித்து நஞ்ஜீயரிடம் ஸமர்ப்பித்தார். அவரும் தாமெழுதியதும் அதற்கு மேல் சிலவும் இருந்தது கண்டு *இதுவென்?* என்று கேட்க, வரதரும் நடந்ததைத் தெரிவித்தார். நஞ்ஜீயரும் இவரைக் கொண்டாடி வாரி எடுத்துக் கொண்டு, *இவர் நம்முடைய பிள்ளை திருக் கலிகன்றி தாஸர்* என்று திருநாமம் சாத்தி, எப்போதும் இவரைத் தம் ஸந்நிதியிலேயே வைத்துக் கொண்டு ஸகலார்த்தங்களையும் ப்ரஸாதித்தருளினார். தமக்குப் பிறகு ஓராண்

வழியில் ஆசார்ய ஸிம்ஹாஸநத்தில் இவருக்குப் பட்டாபிஷேகம் செய்து திருநாட்டுக்கு எழுந்தருளினர். நம்பிள்ளை தம் ஆசார்யரான நஞ்ஜீயருக்கு அடிமை செய்து போந்த க்ரமம் பூர்வர்கள் க்ரந்தங்களில் பரக்கக் காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றை விரிவுக் கஞ்சி விட்டிட்டேன்.

நம்பிள்ளைக்கும் நஞ்ஜீயருக்கும் நடந்த அழகான ஸம்வாதம் கேளீர். *இதரோபாயங்களை விட்டன்றோ எம்பெருமானை உபாயமாகப் பற்ற வேணும்; இதரோபாயங்களைக் காட்டும் ப்ரமாணங்களும் அதிகம்; அவற்றைக் கைக்கொண்டிருப்பவர்களும் அநேகர்; பக வானை உபாயமாகக் காட்டும் ப்ரமாணங்கள் ஸ்வல்பமே! அவனை உபாயமாகப் பற்று மவர்களும் சிலரே! ஆகையால் ப்ரபத்தியாகிய உபாயம் எவ்வாறு சிறந்ததாகும்?* என்று நம்பிள்ளை நஞ்ஜீயரைக் கேட்க, *இருவர் கூடச்சேர்ந்து ஓராற்றில் இறங்கிப் போகும் போது, ஒருவன் அமிழ்ந்தால் அமிழாதவன் அவனைக் கைதூக்கிவிட ப்ரமாணம் வேண்டு மோ? சிலர்தானே பற்றுகிறுர்கள் என்றீர். உலகெங்கும் ஸம்ஸாரிகளேயாய், நாலிரண்டு உத்தம ஆஶ்ரமிகள் இருந்தால், ஸம்ஸாரிகளுக்கு ஓர் ஏற்றமும் ஸந்யாஸிகளுக்கு ஓர் குறைவும் உண்டோ? ஸாரமானவை குறைவாய் அவற்றை அபேக்ஷிப்பவர்களும் குறை வாகத்தான் இருப்பார்கள். எம்பெருமானை ஸர்வஜ்ஞனுய் ஸர்வஶக்தனுய் பரமவத்ஸல னுய் பரமஸுஹ்ருத்தாய் ஶாஸ்த்ரங்களால் அறியும்போது அவனைப் பற்றினுல் வாழ்வு உண்டு என்பதில் விசாரமெதற்கு?* என்றருளிச் செய்தார்.

இனி இவருடைய ஆசார்யத்வ பூர்த்தியைக் காண்போம். இவர் ஓராண்வழி ஆசார்ய ஸிம்ஹாஸநத்திலிருந்து ஸம்ப்ரதாயத்தை நடத்திப்போந்தபோது நிகழ்ந்தவை எண்ணிறந் தவை. ஓரிரண்டினை மட்டும் இங்கு காட்டுகிறேன். இவர் தினமும் நம்பெருமாள் ஸந்நிதி யில் திருவாய்மொழி காலக்ஷேபம் ஸாதிப்பர். இவருடைய காலக்ஷேபத்துக்குண்டான சிறப்பாவது - திருவாய்மொழியில் ஆழ்வார் காட்டின அர்த்தங்கள் உபநிஷதர்த்தங்களே என்று இவர் காட்டும் போது, உபநிஷத் வாக்யங்களையும் உபப்ரும்ஹணங்களான ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களில் உள்ள வாக்யங்களையும், பூர்வமீமாம்ஸா உத்தர மீமாம்ஸா ந்யாயங்களையும், உலக வழக்குகளையும் எடுத்து நன்கு விவரித்து, கேட்பவர்கள் மந்த மதிகளானுலும் அவர்கள் நெஞ்சிலும் திருவாய்மொழியின் அர்த்தம் நிற்கும்படி சொல்ல வல்லமை பெற்றிருத்தலாலேயாம்.

இந்த ஸம்ப்ரதாயத்தில் ஊற்றமுள்ளவர்களே ஒப்புக்கொள்ளும் ஓர் நிகழ்ச்சியைக் கூறு கிறேன். ஶ்ரீரங்கம் கோயிலில் நம்பிள்ளை காலக்ஷேபம் ஸாதிக்குமிடம் பெரிய திருமண்ட பத்துக் கீழ்பாகம். காலக்ஷேபம் ஸாதிக்கும் இவரைக் காணவேணுமென்று படுத்திருக்

கும் பெரியபெருமாள் எழுந்து வந்து ஜய விஜயர்கள் வாசலில் எட்டிப் பார்ப்பாராம். அப்போது ஸந்நிதி வாசல் காக்கும் திருவிளக்குப்பிச்சன் என்பவர் மேல் உராய்வாராம். அவரும், *இதென்ன கார்யம்! போய் படுத்துக் கொள்ளும்! நாங்கள்தான் நம் பிள்ளையை அநுபவிக்க பாக்யம் செய்தவர்கள்; நீரல்லீர் போம்! * என்பாராம். அவரும் போய்ப் படுப்பாராம். இப்படிப் பல முறைகள் நடப்பதுண்டு என்று பெரியோர்கள் பணிப்பர்.

இனி காலக்ஷேப வைபவத்துக்கு எடுத்துக்காட்டாக ஓர் ஐதிஹ்யம். நம்பிள்ளை காலத்தில் கோயிலில் கூரத்தாழ்வான் பேரனுராய் பட்டர் திருக்குமாரரான நடுவில்திருவீதிப்பிள்ளை பட்டர் என்பவர் சிறந்த வித்வானாய் எழுந்தருளியிருந்தார். அவர் தம் குலப்பெருமையை யும் வைதுஷ்யத்தையும் நினைத்து நம்பிள்ளையை மதியாமலிருந்தார். அக்காலத்தில் சோழ தேசத்து அரசன் உறையூரைத் தலைநகராகக் கொண்டிருந்தான். அவன் பரம வைஷ்ணவன். அவனுக்கு ஆஸ்தாந வித்வானுயிருந்தார் நம் பட்டர் ஸ்வாமி. ஒருநாள் அவர் அரசவைக்கு எழுந்தருளும்போது, நம்பிள்ளை ஶிஷ்யரான பின்பழகராம் பெருமாள் ஜீயரைக் கூட அழைத்துப் போனுர். அரசவையில் வித்வான்கள் கூடியிருந்தனர். அப்போது அரசன் நம் பட்டரைப் பார்த்து, **ஸ்வாமி! சக்ரவர்த்தி திருமகன், *ஆத்மாநம் மாநுஷம் மந்யே* என்றதால் மனிதர்களுக்கு இயன்றவற்றையே செய்வான் என்றன்றோ தோன்றுகிறது. ஶ்ரீராமன் ஜடாயு மஹாராஜருக்கு எப்படி மோக்ஷம் கொடுத்தான்?** என்று கேட்டான். பட்டர் ஸம்ப்ரதாயம் கற்காதவராகையாலே திகைத்தார். அந்த ஸமயம் அவருடைய பாக்ய வஶத்தால் அரசனுடன் அரசியல் பேச மந்திரி வந்தான். அவனுடன் அரசன் பேசும் காலத்தில் பட்டரும் தம் அருகிலிருந்த நம்பிள்ளை ஶிஷ்யரை *இவ்விடத்துக்கு நம் பிள்ளை என்ன ஸாதிப்பர்?* என்று கேட்டார். அவரும், **ஸத்யேந லோகாந் ஜயதி* என்று ஸாதிப்பர்** என்றுர். இதற்குள் மந்திரியை அனுப்பிவிட்டு அரசன் பட்டரை நோக்கி, *நான் கேட்டதற்கு ஸமாதாநம் வரவில்லையே* என்று சொல்ல, பட்டரும், *ஶ்ரீராமன் தன் ஸத்யவாக்கால் மோக்ஷத்தை வஶமாக்கி விட்டிருப்பவன். அதனுல் அவன் ஜடாயு மஹாராஜருக்கு மோக்ஷம் கொடுத்தான். இது மனிதத் தன்மைக்குப் புறம்பான தன்று* என்று ஸாதித்தார். அரசனும் மிக உகந்து இவருக்கு விலை மதிப்பற்ற வஸ்த்ரம் ஆபரணம் தநம் முதலியவைகளை பரிசாகக் கொடுத்தான்.

அவைகளைப் பெற்று வந்து பட்டரும் பின்பழகராம் பெருமாள் ஜீயர் புருஷகாரமாக நம்பிள்ளை திருவடிகளிலே ஸமர்ப்பித்து, தானும் தண்டனிட்டு, நடந்தவைகளைக் கூறி, *தேவரீருடைய திவ்யஸூக்தியில் பதினுயிரம் கோடியில் ஒன்றுக்குப் பெற்ற தநம் இது; அவஶ்யம் தநத்துடன் அடியேனையும் அங்கீகரிக்க வேணும்* என்று ப்ரார்த்திக்க,

நம்பிள்ளையும் அங்கீகரித்தருளி அவருக்கு ஸகலார்த்தங்களையும் ப்ரஸாதித்தார். அவரும் நம்பிள்ளையை விட்டுப் பிரியாமல் இருந்து, ஒருரு திருவாய்மொழிக்கு அர்த்தம் கேட்டு, அதை ஓலைச்சுவடிகளில் எழுதி, ஒன்றேகால் லக்ஷம் க்ரந்தமான அதனை எடுத்துக் கொண்டு நம்பிள்ளை ஸந்நிதியில் ஸமர்ப்பித்தார். அதைக் கண்ட நம்பிள்ளையும் இவருடைய வைதுஷ்யத்துக்கு மிகவும் உகந்து கொண்டாடினார். ஆனால் அந்த க்ரந்தம் மிகவும் விஸ்தரமாய் இருப்பதைக் கண்டு அதனை உலகில் பரவ விட்டால் ஆசார்ய ஶிஷ்ய க்ரமம் அழிந்து விடும் என்று அதனைக் கரையான் புற்றில் வைத்துவிட்டார்.

முதலியாண்டான் என்னும் மஹாசார்யருடைய திருப்பேரனார் கந்தாடை தோழப்பர் என்பவர். அவர் சிறந்த வித்வான். அவர் நம்பிள்ளையைப் பொறாமையால் வெறுத்து வந்தார். ஒரு நாள் நம்பிள்ளையை கோஷ்டியுடன் நம்பெருமாள் ஸந்நிதியில் கண்டு பொறாமல் செவிசுடும் கீழ்மை வார்த்தைகளாலே வைதுவிட்டுத் தம் திருமாளிகைக்கு எழுந்தருளினார். அவர் தேவிகள் நம்பிள்ளை காலக்ஷேப கோஷ்டியில் விடாமல் அந்வயிப்பவள். தம் பர்த்தாவின் செயலை அறிந்து, திருமாளிகை சேர்ந்த அவருக்கு முகம் கொடாமல் வேண்டிய பணிவிடைகளை மட்டும் செய்தார். தோழப்பர் காரணம் கேட்க, *பாகவத அபசாரப்பட்ட தேவரீரால் அடியேன் ஆத்மக்ஷேமம் அடையவொண்ணாது. இந்த ஶரீரம் தான் தேவரீருக்கு ஶேஷம். இதை தேவரீர் எவ்விதத்திலும் பணி கொள்ளலாம்* என்று தெரிவித்தாள்.

அதைக் கேட்ட தோழப்பரும் விவேகியாகையாலே தம் தவறை உணர்ந்து அதற்கு பரிஹாரம் தேட நினைத்தார்; தம்மை நம்பிள்ளையிடம் அழைத்துப் போகும்படி பத்நியை வேண்டினார்; அவளும் இசைந்து இருவரும் புறப்பட்டனர். அவ்வளவில் ராத்ரியும் ஆயிற்று. தோழப்பர் கையில் விளக்குடன் திருமாளிகை வாசற்கதவைத் திறந்தவுடன் திண்ணையில் ஓர் உருவம் முக்காடிட்டுக் கிடப்பதைக் கண்டார்; *யார் நீர்?* என்று கேட்டார்; *அடியேன் கலிகன்றி தாஸன்* என்று பதில் வந்தது. தோழப்பர் வந்திருப்பவர் நம்பிள்ளை என்று அறிந்து, *அடியேனைக் கொல்ல வந்தீரோ?* என்று கேட்டார். *அன்று; அடியேன் உஜ்ஜீவிக்க வந்தேன்; தேவரீர் திறத்து அபசாரப்பட்ட அடியேனுக்கு தேவரீர் திருமாளிகை வாசல் அல்லது கதி இல்லை என்று வந்தேன்* என்று நம்பிள்ளை உரைக்க, தோழப்பரும், *அபசாரப்பட்ட என்னால் அபசாரப்படாத தமக்கு உஜ்ஜீவநம் என்கிறீரே! இதென்ன பரிபாகம்!* என்று உகந்து, அவரை எடுத்து அணைத்துக்கொண்டு, *நீர் உலகுக்கெல்லாம் ஆசார்யன்!* என்று கொண்டாடினார். அன்று தொடங்கி, நம்பிள்ளைக்கு *உலகாரியன்* என்னும் பேர் ஓங்கி விலகாமல் நின்றது.

இவர் ஸ்ரீபாதத்தில் ஆஶ்ரயித்தவர்களில் பெரியவாச்சான்பிள்ளை என்பவரும் மிகச் சிறந்த வித்வானுய்த் திகழ்ந்தார். நம்பிள்ளை நியமநத்தால் அவர் திருவாய்மொழிக்கு *இருபத்துநாலாயிரப்படி* என்னும் வ்யாக்யாநம் அருளிச்செய்தார். அத்துடன் மற்ற மூவாயிரத்துக்கும் வ்யாக்யாநம் அருளிச்செய்தார்.

பெரியதிருமொழி 5ஆம் பத்து 6ஆம் திருமொழி *ஏழை ஏதலனில் 7ஆம் பாட்டில் *ஓதுவாய்மையும் ..... உனக்கு முன்தந்த அந்தணனொருவன்* என்று க்ருஷ்ணனுக்கு ஆசார்யனுன ஸாந்தீபநியை *ஒருவன்-அத்விதீயன்-ஒப்பில்லாதவன்* என்று கொண்டாடி அவ்விடத்து வ்யாக்யாநத்தில்,

> *முற்படத்வயத்தைக் கேட்டு இதிஹாஸ புராணங்களையும் அதிகரித்து, பர பக்ஷப்ரதிக்ஷேபத்துக்குடலாக ந்யாய மீமாம்ஸைகளையும் அதிகரித்து, போது போக்கும் அருளிச்செயலிலேயாம்படி பிள்ளையைப்போலே அதிகரிப்பிக்க வல்லவனையிறே ஒருத்தன் என்பது*

என்று தம் ஆசார்யரான நம்பிள்ளையை ஸாந்தீபநிக்கு த்ருஷ்டாந்தமாகக் காட்டி பெரியவாச்சான் பிள்ளை கொண்டாடுகிறுர்